[26th August 1955

SRI M. MARIMUTHU :—" வாடகைக்கு கட்டடத்தை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக ஒரத்தநாட்டில் சர்க்காரே ஒரு கட்டடத்தை உடனடியாகக் கட்டுவதற்கு யோசனை செய்வார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" புதிதாகக் கட்டடம் கட்டவேண்டுமானால் ஒரு லட்சம் ரூபாய் ஆகும். அதனால்தான் இம்மாதிரி வாடகைக்கு இடம் கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு இடம் பார்த்திருக்கிறோம். அங்கே தாலூகா ஆபீசை வைக்கலாம் என்று நினைக்கிறேன்."

SRI S. VENKATRAMA AYYAR :—" Are the Government aware that there is travellers' bungalow at Orathanad now? The old travellers' bungalows now used by the Livestock Farm Office. Will the Government be pleased to construct a building, at a lesser cost if need be, and not disturb the Livestock Farm Office? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" I know that the Livestock Farm is there now. But still the old name continues. How can we object to the name once given? "

* 2305 *Q.*—Not put by the Member.

Starting of a hostel at Kozhikode

* 2306 *Q.*—SRI K. MOIDU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government have put any restrictions on the starting of a hostel at Kozhikode in Malabar for the students coming from the 'Laccadives'; and

(*b*) if so, what they are?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

Minimum age-limit for S.S.L.C. Examination

* 2307 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is a minimum age-limit fixed for students appearing for the S.S.L.C. examination; and

(*b*) if so, whether any exemption is granted from this rule and, if so, on what basis?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) Yes. A minimum age of 15 years on or before the first day of the month in which the S.S.L.C. public examination is to be held, is required of each student. However, the following departmental officers have been empowered to relax the age rule and to grant exemption in the cases specified against each :—

Boys' schools—District Educational Officers.—In cases in which the age of the pupil is less than 15 by not more than two years.

Divisional Inspectors.—In cases in which the age of the pupil is less than 15 by more than two years.

Girls' schools—Inspectresses of Schools.—All cases."

26th August 1955]

SRI K. V. RAMASWAMI :—" சிறிய வயதிலேயே நிறைய மாணவர்கள் படிக்க ஆரம்பித்துவிடுவதினுல் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷைக்கு உட்காருவதற்கு குறைந்த பட்ச வயது 15 என்று இருப்பதை 13 என்று குறைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? " 9-10 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இம்மாதிரி சிறிய வயதிலே படிக்க ஆரம்பிப்பது குழந்தைகளுக்குத் தீங்கை விளைவிக்கிறது என்பது நிபுணர்கள் கருத்து. ஆகையால், சில இடங்களில் ஐந்து வயதில் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போக ஆரம்பிப்பதற்குப் பதிலாக ஆறு வயதில் ஆரம்பிக்க வேண்டுமென்றும், இன்னும் சில இடங்களில் 6 வயது என்று இருப்பதற்குப் பதிலாக 7 வயது என்று மாற்றவேண்டுமென்றும் யோசனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால், வயதைக் குறைக்கக்கூடிய பிரச்னை இப்பொழுது எழுவதில்லை."

SRI R. S. ARUMUGAM :—" சிறு வயதிலேயே பரீக்ஷை எழுதுபவர்களுக்கு பிரத்யேக விதிவிலக்கு கொடுக்கப்படுகிறதா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" சிலருக்கு விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது. ஆனுல், அவர்கள் கல்லூரிக்குப் போய்ச் சேர முடியாது."

SRI G. GOVINDAN :—" ஏழு வயதுக்குமேல் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களில் சேர்த்தால் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிக்ஷை எழுதுவதற்கு 20 வயதுக்கு மேல் ஆகிறது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் உத்தியோகத்திற்குப் போகும்போது சிரமம் ஏற்படுகிறது. அதனுல் உத்தியோகத்திற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறைந்த பட்ச வயதை உயர்த்துவதற்கு சர்க்கார் ஆலோசிப்பார்களா ? "

THE HON. SRI. C. SUBRAMANIAM :—" எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷைக்குப் போக அங்கத்தினர் சொல்வதுபோல் 20 வயதுக்குமேல் ஆகாது. 6 வயதில் படிக்க ஆரம்பித்தாலும் 11 வருஷ படிப்பிற்குப் பிறகு எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷைக்குப் 17-வது வயதில் போய்த் தேறிவிட முடியும். 15-வயதுதான் சரியான வயது என்று எல்லோரும் கருதுகிறுர்கள்."

SRI M. PALANIYANDI :—" $14\frac{1}{2}$ வயது உள்ள மாணவர்கள் சிலர் விதிவிலக்கு பெற்றுக்கொண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷை எழுதிவிடுகிறுர்கள். இரண்டு ஆண்டுகள் இன்டர்மீடியட் படித்துவிட்டு $16\frac{1}{2}$ வயதில முடித்துவிடுகிறுர்கள். அவர்கள் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டுமென்றுல் 17-வது ஆகியிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட மாணவர்கள் வைத்திய, பொறி இயற் கல்லூரிகளில் சேருவதற்கு வயது 6 மாதம் குறைவாக இருப்பதினுல் இதற்கு விதிவிலக்கு கொடுப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா ? பரீட்சை வைத்து வேண்டுமானுல் அவர்களை எடுத்துக் கொள்ளலாம். ஆனுல், வயதுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" வைத்திய பொறி இயற் கல்லூரிகளில் சேருகிறவர்களுக்குக் குறைந்த பட்சம் 17 வயதாவது ஆயிருக்கவேண்டும். அவர்களுடைய வளர்ச்சி ஓரளவு முடிந்த பிற்பாடுதான் இம்மாதிரி கல்லூரிகளிலும் பயிற்சி ஸ்தாபனங்களிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது நிபுணர்கள் கருத்து. ஆகையால் வயதைக் குறைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்."

SRI M. C. MUTHUKUMARASWAMY :—" நிபுணர்களுடைய கருத்தில் சிறு வயதில் அவர்களைப் படிக்கவிடக்கூடாதென்று இருந்தால், சிறு வயதிலேயே இவர்கள் கெட்டிக்காரத்தனமாகப் படிப்பதால் இவர்களையே நிபுணர்கள் என்று சர்க்கார் கருதுமா என்று கேட்கிறேன்."

[26th August 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அவர்களும் ஐந்து வயதில் ஆரம்பிப்பதை 6 வயதில் ஆரம்பித்தால் இன்னும் பெரிய நிபுணர்கள் ஆவார்கள்."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" As a matter of fact, I do not want the minimum age-limit to be reduced. But will the Hon. Minister be pleased to state whether it will be possible for the Government to make the pupils eligible for college study when such pupils are given exemption as per rules? Otherwise, it will be tantamount to a sort of regimentation."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" There is no question of regimentation in this. We have to see that persons go to a college at some age. That is why this minimum age has been fixed. I do not think that we can reduce it."

SRI S. DAIVASIGAMONEY :—" In view of the raising of the age-limit for appearing for the S.S.L.C. examination, may I know whether the age-limit for eligibility for appointment to Government service will also be proportionately raised? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" We have not raised the age-limit. It is where it is now. When we raise the age-limit, this question will certainly be considered."

Andhiyur tank in Bhavani taluk

* 2308 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a scheme to reinforce the banks of the Andhiyur tank in Andhiyur village, Bhavani taluk, and to construct small viaducts from the main tank to feed seven other subsidiary tanks has been included in the Local Development Schemes for Coimbatore district; and

(*b*) if so, the progress made so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI P. G. MANICKAM :—" இந்தக் குளத்திலே தண்ணீர் நிரப்புவதன் மூலம் 7 குளங்களுக்கு தண்ணீர் நிரப்புவதற்கு வசதி செய்யலாம். இதன் மூலமாக அனேக ஆயிரக்கணக்கான கிணறுகளுக்கு அவசியம் தண்ணீர் கிடைக்கும். இந்தக் குளங்களுக்கு தண்ணீர் நிரப்ப வேண்டு மானல் மேட்டூர் அணைக்கட்டு வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் நிரப்ப வசதி இருக்கிறது. அல்லது கொடுவேளி அணைக்கட்டு வாய்க்கால் மூலமாகவும் தண்ணீர் எடுத்து இந்தக் குளங்களை நிரப்ப வசதி இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதுபற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஜில்லாக் கலெக்டர் அவர்களிடம் விளக்கிச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்."